பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 114

வியாழக்கிழமை
20 மார்ச் 2025

பங்குனி 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## தென்னக்கோன் நீதிமன்றத்தில் சரணடைவு

கொழும்பு, மார்ச் 20
திறந்த பிடியாணை பிறப் பிக்கப்பட்டு தேடப்பட்டு வந்த, பதில் பொலிஸ்மா

11

இலங்கையில்

## 29வீதமாணவர்கள் இடைவிலகல்!

கொழும்பு, மார்ச் 20
இலங்கையில் 29 சதவீத பாடசாலை மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்தியுள்ளனர் என்று ஆய்வொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
உலகளாவிய பாடசாலைகளை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள

11

கட்சியின் உறுப்புரிமை விவகாரம்

## சிவமோகனின் மனு மீது இன்று நீதிமன்று முடிவு!

யாழ்ப்பாணம், மார்ச் 20
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து தம்மை இடைநிறுத்தியமை தொடர்பில், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மருத்துவர் எஸ்.சிவமோகன் தாக்கல் செய்த வழக்கின் மீது நீதி

11

336 உள்ளூராட்சி சபைகளுக்கும்

# தேர்தல் எப்போது? இன்று அறிவிப்பு!

**கொழும்பு, மார்ச் 20**
**யாழ்ப்பாணம் மாநகரசபை உட்பட 336 உள்ளூராட்சி சபைகளுக்குரிய தேர்தல் திகதி இன்று மதியம் தேர்தல் ஆணைக்குழுவால் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது.**

### கட்டுப்பணம்

யாழ்.மாவட்டத்தில் 175 தரப்புகள்

மன்னாரில் 55 தரப்புகள்

கிளிநொச்சியில் 30 தரப்புகள்!

முல்லையில் 44 தரப்புகள்!

வவுனியாவில் 71 தரப்புகள்!

11

## பரீட்சை மண்டபத்துக்குள் வன்முறைக்குழு அடாவடி!

மாணவர்கள் மீது கடும் தாக்குதல்
கோரப்பட்டது பொலிஸ் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20
கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை மண்டபத்துக்குள் வன்முறைக் குழுவொன்று அத்துமீறி நுழைந்து மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. இந்தச் சம்பவம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் அமைக்கப்பட்டுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நிலையமானது இரண்டு

11




## யாழ். பல்கலைக்கழகத்தில் 39ஆவது பட்டமளிப்பு விழா!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39ஆவது பட்டமளிப்பு விழா, நேற்று ஆரம்பமானது. நான்கு நாள்களில் 13 அமர்வுகளாக இந்தப் பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது.

**(தொடர்புடைய செய்தி பக்கம்: 07)**

## பட்ஜெட் மீது நாளை இறுதி வாக்கெடுப்பு!

கொழும்பு, மார்ச் 20
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.
2025ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் கடந்த பெப்ரவரி

11

அத்துமீறிய மீன்பிடிக்காக

## இந்திய மீனவர்கள் இருவருக்குச் சிறை

நால்வருக்கு ஒத்திவைத்த சிறை

யாழ்ப்பாணம், மார்ச் 20
அத்துமீறிய மீன்பிடிக்காக நெடுந்தீவில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட தமிழக

11



'இப்ப சோதினை எழுதுறதே பெரும் சோதினையா மாறிட்டு கண்டியளோ'

## கைதுசெய்யச்சென்ற பொலிஸாரை தாக்கிவிட்டு கைதி தப்பியோட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 20
யாழ்ப்பாணம் தெல்லிப்பழைப்பகுதியில், சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்வதற்குச் சென்றபோது அவர் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பியோடியுள்ளார்.
சந்தேகநபரைக் கைதுசெய்யுமாறு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்

11

## இந்தியப் பிரதமர் மோடி இலங்கை செல்லக்கூடாது!



வைகோ வலியுறுத்து

புதுடெல்லி, மார்ச் 20
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்குச் செல்லக் கூடாது என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான வைகோ வலியுறுத்தியுள்ளார்.
இது தொடர்பில் மக்களவையில் வைகோ மேலும் தெரிவித்ததாவது:
ஸ்ரீலங்கா

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 19.03.2025 | திகதி 19.03.2025 | திகதி 19.03.2025 | திகதி 19.03.2025 | திகதி 19.03.2025 | திகதி 19.03.2025 | திகதி 19.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4022 | சீட்டிழுப்பு இலக்கம் 1089 | சீட்டிழுப்பு இலக்கம் 048 | சீட்டிழுப்பு இலக்கம் 2128 | சீட்டிழுப்பு இலக்கம் 5780 | சீட்டிழுப்பு இலக்கம் 1810 | சீட்டிழுப்பு இலக்கம் 0355 |
| ஆங்கில எழுத்து J | வெற்றி இலக்கினம் தனுசு | ஆங்கில எழுத்து Z | ஆங்கில எழுத்து C | ஆங்கில எழுத்து E | ஆங்கில எழுத்து X | ஆங்கில எழுத்து E |
| | | | சுப்பர் இலக்கம் 24 | | | |
| வெற்றி இலக்கங்கள் 36 40 43 54 | வெற்றி இலக்கங்கள் 17 35 46 62 | வெற்றி இலக்கங்கள் 7 5 8 9 | வெற்றி இலக்கங்கள் 08 42 52 71 | வெற்றி இலக்கங்கள் 8 6 1 1 7 9 | வெற்றி இலக்கங்கள் 14 15 66 77 | வெற்றி இலக்கங்கள் 1 1 7 9 |
| விசேட எழுத்து J | | | | | விசேட எழுத்து X | |

# இரு அரச திணைக்களங்களால் வடக்கு அபிவிருத்தி முடக்கம்

## வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், மார்ச் 20**

**வனவளத்திணைக்களம், வன உயிரிகள் திணைக்களங்களால் வடக்கு மாகாணத்திலேயே அதிகூடிய பாதிப்பு நிகழ்கின்றது. இந்த இரண்டு திணைக்களங்களின் செயற்பாடுகள் மக்களின் மீள்குடியமர்வு, விவசாயம், அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு இடையூறாக அமைந்துள்ளன என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

வடக்கு மாகாணத்துக்கு அதிகளவான நிதி பல்வேறு வகையிலும் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றைவினைத்திறனாகவும், ஒருங்கிணைந்தும், விரைவாகவும் பயன்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் ஆகியோரின் இணைத்தலைமையில் நடைபெற்றது.

இதன்போது ஆளுநர், வடக்கு மாகாணம் கால்நடை உற்பத்தித் துறையில் மிகச்சிறந்த நிலையில் உள்ளபோதும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இல்லாமல் இருப்பது பெரும் பின்னடைவாகக் காணப்படுகின்றது. சட்டவிரோதமான மணல் அகழ்வு மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. வடக்கு மாகாணத்தில் ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## மஹிந்தவின் மனுவை நீதிமன்று நிராகரிப்பு

கிளிநொச்சி, மார்ச் 20

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் முடிவை எதிர்த்து தாக்கல்செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

குறித்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மஹிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புப் படையினரை 60 அதிகாரிகளாகக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிராக இந்த அடிப்படை உரிமை மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-44,சீ)

## புதிய கூட்டணியில் இணையும் வியாழேந்திரன் - பிள்ளையான்

மட்டக்களப்பு, மார்ச் 20

கிழக்கு மாகாணத்தில் கிழக்குத் தமிழர்களின் வளர்ச்சியையும் சுபிட்சத்தையும் கருத்திற்கொண்டு பலம்மிக்க அரசியல் சக்தி ஒன்றினைக் கட்டமைக்கும் முயற்சியில் 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' எனும் புதிய கூட்டமைப்பு உதயமாகியுள்ளது.

இதன் முதற்கட்டமாக முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் என அழைக்கப்படும் பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்குத் தமிழர் கழகத்துக்கும் இடையிலான உத்தியோகபூர்வ புரிந்துணர்வு கைச்சாத்திடப்பட்டுள்ளது. (ச-இ)

## தமிழ்க்கட்சிகள் ஓரணியில் திரண்டு தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண்க

### தாம் போட்டியிடவில்லையென்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

அனைத்துத் தமிழ் அரசியற்கட்சிகளும் ஓரணியில் திரண்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரவேண்டும் எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் தேர்தலில் நாங்கள் போட்டியிடவில்லை. நடைபெற உள்ள தேர்தல்தான் முக்கியமான ஒரு தேர்தலாக அமையும். எனவே அரசியலுக்காக இல்லாமல் அனைவரும் ஒன்றுதிரண்டு ஓரணியில் நின்று தமிழ்மக்களின் பிரச்சினையைத் தீர்க்கமுன் வருவதே சிறந்த நடவடிக்கையாகும் - என்றார். (ச-125,113)

## வரிஏய்ப்பால் 6 மாத பொதுப்பணி

கொழும்பு, மார்ச் 20

வற்வரி செலுத்தத் தவறிய நிறுவனப் பணிப்பாளர்கள் மூன்று பேருக்கு ஆறு மாதங்கள் பொதுப்பணியில் ஈடுபடுமாறு கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கந்தானையிலுள்ள சிகரெட் விநியோக நிறுவனமொன்றின் பணிப்பாளர்களுக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனத்தின் வற்நிலுவையான 233 மில்லியனைச் செலுத்துமாறு 2024 ஆம் ஆண்டு உத்தரவிடப்பட்டிருந்தது, எனினும் சம்பந்தப்பட்ட நிறுவனம் நிலுவையான வற்வரியைச் செலுத்தத் தவறியதையடுத்து நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது. (ச-6)

| | திகதி | தினம் |
|---|---|---|
| சனிதா DLB | 19.03.2025 | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கம் 15 26 63 78 | வெற்றி வாரம் 4915 |

| | திகதி | தினம் |
|---|---|---|
| லக்ன ராசி DLB | 19.03.2025 | புதன்கிழமை |
| மிதுனம் | வெற்றி இலக்கம் 24 30 41 57 | சீட்டிழுப்பு வாரம் 4466 |

| | திகதி | தினம் |
|---|---|---|
| KAPRUKA DLB | 19.03.2025 | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து V, சுப்பர் இலக்கம் 31 | வெற்றி இலக்கம் 03 08 29 70 | வெற்றி வாரம் 1930 |

| | திகதி | தினம் |
|---|---|---|
| லக்ன ராசி DLB | 17.03.2025 | திங்கட்க்கிழமை |
| கும்பம் | வெற்றி இலக்கம் 25 30 48 62 | சீட்டிழுப்பு வாரம் 4464 |

| | திகதி | தினம் |
|---|---|---|
| KAPRUKA DLB | 17.03.2025 | திங்கட்க்கிழமை |
| ஆங்கில எழுத்து Y, சுப்பர் இலக்கம் 40 | வெற்றி இலக்கம் 35 42 45 55 | வெற்றி வாரம் 1928 |

| | திகதி | தினம் |
|---|---|---|
| அத கோடிபதி DLB | 17.03.2025 | திங்கட்க்கிழமை |
| ஆங்கில எழுத்து M | வெற்றி இலக்கம் 31 62 66 75 | வெற்றி வாரம் 2578 |

| | திகதி | தினம் |
|---|---|---|
| JAYODA DLB | 17.03.2025 | திங்கட்க்கிழமை |
| ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கம் 14 17 33 52 | வெற்றி வாரம் 2112 |

## ரணில் அரசாங்க நிதியில் வெளிநாடு சுற்றவில்லை!

### அவரது அலுவலகம் அறிக்கை

கொழும்பு, மார்ச் 20

அரசாங்கத்தின் நிதியில் எந்தவொரு தனிப்பட்ட பயணங்களையும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளவில்லை என்று ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவரது பாரியாரும் 2023ஆம் ஆண்டு அரச செலவில் லண்டன் சென்றனர் என்று வெளியாகியுள்ள கருத்துகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவையாகும்.

2023ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மூன்று சந்தர்ப்பங்களில் லண்டன் சென்றுள்ளார். மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவில் பங்குப்பற்றுவதற்காக 2023 மே மாதம் 9ஆம் திகதியும், பாரிஸ் மாநாட்டில் கலந்துகொண்டதன் பின்னர் சர்வதேச ஜனநாயக சங்கத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான அமர்வில் கலந்துகொள்வதற்காகவும், ஹவானா நகரத்தில் இடம்பெற்ற ஜ77 உச்சிமாநாட்டில் கலந்து கொண்டதன் பின்னர், நியூயோர்க் மற்றும் லண்டனுக்கும் பயணித்திருந்தார்- என்றுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அஸ்வெசும'வில் திருத்தம் அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மார்ச் 20

**தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்துக்கமைய அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய அஸ்வெசும நலன்புரி நன்மைகள் உதவி வழங்கும் திட்டத்தின் முதலாவது அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள 'நிலையற்றவர்கள்' சமூகப்பிரிவினருக்கான உதவித்தொகை கிடைக்கின்ற காலப்பகுதியை 2025.04.30 வரை நீடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள இயலாமைக்குட்பட்டவர்கள் மற்றும் சிறுநீரக நோய்க்கான உதவிபெறுபவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த உதவித்தொகையை 7,500 ரூபாவிலிருந்து 10,000 ரூபாவரை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் முதியோருக்காக வழங்கப்படும் உதவித்தொகையை 3000 ரூபாவிலிருந்து 5000 ரூபாவரை அதிகரித்து அதனை ஏப்ரல் மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள உதவித்தொகையைப் பெறுகின்ற இயலாமைக்குட்பட்ட நபர்களுக்கான கொடுப்பனவு, சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவு மற்றும் முதியோருக்கான கொடுப்பனவுகளின் காலப்பகுதியை இவ்வருட இறுதிவரை நீடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. புதிதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள இயலாமைக்குட்பட்ட நபர்கள், சிறுநீரக நோயாளர்களில் தகுதிபெறுகின்றவர்களுக்கு குறித்த கொடுப்பனவை 2025.12.31 வரை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது . (ச-இ)



## மணல்கடத்தல் டிப்பரை தப்பிக்கவைத்த கார்!

கிளிநொச்சி, மார்ச் 20

கிளிநொச்சியிலிருந்து சட்டவிரோதமாக மணல் ஏற்றிவந்த டிப்பரை மடக்கிப்பிடிப்பதற்கு வீதியில் சென்ற கார் ஒன்று இடையூறு விளைவித்தது என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் அந்த டிப்பர் வீதியில் மணலை கொட்டிவிட்டுத் தப்பிச்சென்றதுடன் காரும் தப்பிச்சென்றுள்ளது. சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை துரிதப்படுத்தியுள்ளனர். (ச-27,28)

## அர்ச்சுனாவுக்கு வாய்ப்பூட்டு

கொழும்பு, மார்ச் 20

எதிர்வரும் 8 அமர்வு நாள்களில் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும், கருத்துகள் மற்றும் உரைகளை நேரடியாக ஒலி, ஒளிபரப்பு செய்வதற்கு சபாநாயகரினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இராமநாதன் அர்ச்சுனாவினால் நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் தொடர்ச்சியாக முன்வைக்கப்படும் வெறுப்புப்பேச்சுகள் மற்றும் விமர்சனங்களால் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்துக்குப் பாதிப்பு ஏற்படுவதாக சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன சபையில் அறிவித்துள்ளார்.

அதற்கமைய அவரது வெறுப்புப்பேச்சுகளை ஹன்சார்ட் பதிவிலிருந்தும் நீக்குமாறு அவர் பணிப்புரை விடுத்துள்ளார். (ச-27,28,44)

## அடாவடி யூரியூப்பருக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

அடாவடித் தனமாகச் செயற்பட்டு காணொலி வெளியிட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யூரியூப்பரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அவரைக் கடந்த 10ஆம் திகதி மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்ட நிலையில் மீண்டும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (ச-27)



## மோ.சைக்கிளை பந்தாடிய ஹைஏஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 20

சாவகச்சேரிநகர்ப் பகுதியில் ஹைஏஸ் வாகனமொன்று நேற்று அதிகாலை நிறுத்திவைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. திருகோணமலை கிண்ணியாவிலிருந்து யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு நிகழ்வுக்கு மாணவர்களுடன் வருகைதந்த ஹைஏஸ் வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது. விபத்தில் ஒருவர் சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார். நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள்கள் முழுமையாகச் சேதமடைந்தன. (ச-28)

## மருதனார்மடத்தில் விபத்து முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதனார்மடம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் சைக்கிளில் பயணித்த 75 வயதுடைய முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மருதனார்மடத்தடியில் இருந்து உரும்பிராய் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளுடன் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. (ச-27)




காதலுக்குப் புறா, அன்னம், அனுமன் எண்டு தூது விட்ட காலம் போய், இப்ப பேஸ்புக், இன்ஸ்டகிராம், வட்ஸப், ரிக்ரொக்கில எங்கட இளசுகள் தூதுவிடத் தொடங்கியிருக்கினம். ஆனால் ஆர் எவரெண்டே தெரியாதவைக்கும் தூது அனுப்பி, லவ் பண்ணி, கலியாணமும் கட்டிற இந்த இளசுகள் எவ்வளவு கெதியா சேர்ந்தினமோ அவ்வளவு கெதியா பிரிஞ்சும் போகினம். அதாலதான் இப்ப கோர்ட்ஸுகளில விவாகரத்து கேஸுகள் குவிஞ்சுகொண்டே போகுதாம்.

கிட்டடியில ஒரு சமூகசேவை நிறுவனம் இப்பிடி ரிக்ரொக்கில காதலிச்சுக் கலியாணம் பண்ணின நாலைஞ்சு சோடியளைக் கூப்பிட்டு அவைக்கு கவுன்ஸிலிங் குடுக்கிறமாதிரி கதைச்சது. அந்தச் சோடியள் எல்லாருக்குமே 17 வயதுக்கும் குறைவு. அப்பிடியெண்டால் அவையள் எட்டாம், ஒன்பதாம் வகுப்பிலேயே கையில போனோட திரிஞ்சு, உந்த ரிக்ரொக்கையே எந்தநேரம் பார்த்துக்கொண்டிருந்திருக்கினம். அதாலதான் தங்களை மாதிரி ரிக்ரொக்கில வீடியோ போட்டவையோட 'சட்' பண்ணி, பழக்கமாகி, அப்பிடியே ஓடிப்போய் கலியாணமும் கட்டியிருக்கினம்.

17 வயதுக்குள்ள கலியாணம் கட்டினால் செல்லாது எண்டதும், அது குற்றம் எண்டதும்கூட இந்த ரிக்ரொக் சோடியளுக்குத் தெரியேலை. ஆனால் ரிக்ரொக்கில எப்பிடியெல்லாம் ரீல்ஸ்போட்டு ஆக்களுக்கு வலை வீசலாம் எண்டது மட்டும் வடிவாத் தெரிஞ்சிருக்கு. அண்டைக்கு கவுன்ஸிலிங்குக்கு ( உளவள ஆலோசனைக்கு) வந்த சோடியளில இரண்டு சோடி ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவையாம். அக்காவும், தங்கையும் ரிக்ரொக்கோட திரிஞ்சு ஒராள் சிங்களப் பெடியனையும்,இன்னொரு ஆள் முஸ்லிம் பெடியனையும் லவ் பண்ணி,அவங்களும் வீட்டை விட்டிட்டு வந்து இவையோட இருக்கிறாங்களாம். வீட்டுக்காரரும் அவையைச் சேர்த்து வீட்டில வைச்சிருக்கினமாம். அந்தப் பெடியளுக்கும் 17 வயதுக்குக் குறைவு. அவங்களுக்கும் விவரம் பத்தாது. இல்லாட்டி பிஞ்சிலையே பழுத்த ஆக்களா இருக்கோணும். இப்பிடி விவரம் தெரியாத வயதில, ரிக்ரொக்கில காதலிச்சுக் கட்டிப் போட்டு, நாலைஞ்சு மாதத்திலேயே கழட்டிவிட்டிட்டு போற சம்பவங்களும் நடந்திருக்கு.

முல்லைத்தீவில இப்பிடித்தான் ஒரு பெடியன் , ரிக்ரொக்கில மட்டக்களப்புப் பிள்ளை ஒண்டைக் காதலிச்சுக் கலியாணம் கட்டி, வீட்டை கொண்டந்து வைச்சிருந்திருக்கிறார். நாலைஞ்சு மாதம் ஒண்டா இருந்திருக்கினம். பிறகு திடீரெண்டு ஒருநாள் அந்தப் பெடியன் இன்னொரு பெட்டையை வீட்டை கூட்டியந்திட்டானாம். அதுவும் ரிக்ரொக் லவ்வாம். அதுக்குப் பிறகு இந்த மட்டக்களப்புப் பிள்ளை என்ன செய்யிறதெண்டு தெரியாமல், தன்ர வீட்டுக்காரரிட்ட கெஞ்சி மண்டாடி ஒருமாதிரி அவையோட போய்ச் சேர்ந்திட்டாவாம். இல்லாட்டி அந்தப் பிள்ளையின்ர வாழ்க்கை சீரழிஞ்சிருக்கும். தங்கட பிள்ளையளுக்கு 18 வயதுக்கு முதல் போனைக் கையில குடுக்காமல் பெற்றோர் கவனிச்சாலே இந்தமாதிரிப் பிரச்சினையள் வராமல் ஏலுமட்டும் தடுக்கலாம். அதைவிட்டுட்டு பிள்ளையளிட்ட 10 வயதிலேயே போனைக் குடுத்தால், அதுகள் இப்பிடி மருந்தடிச்ச பழம் மாதிரி சின்னனிலையே பழுத்து, வெம்பி விழவேண்டியதுதான்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு முடியும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும். எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். பிரமுகர்களின் தொடர்பும், அதனால் அனுகூலமும் உண்டாகும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். திடீர்ச்செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். திடீர்ப்பயணம் ஒன்றை மேற்கொள்ளநேரிடும்.

**கடகம்:** காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் சில பிரச்சினைகளும் அலுவலகத்தில் ஏற்படக்கூடும். புதிய முயற்சியைக் காலையிலேயே தொடங்குவது நல்லது. போட்டிகளைச் சமாளிக்க வேண்டிவரும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்குத் தாய்மாமன் வழியில் ஆதாயம் உண்டாகும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அடிக்கடி குழப்பம் ஏற்படக்கூடும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காகச் செலவு செய்யவேண்டிவரும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம் :** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். இனம்தெரியாத குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். அலுவலகப் பணிகளில் சக ஊழியர்கள் உதவி செய்வார்கள். வியாபாரத்தில் லாபம் கூடுதலாகக் கிடைக்கும். காரியங்கள் முடிவதில் இழுபறி நிலை மாறும்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். ஆதாயம் ஏற்படும்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மன உறுதியுடன் முடிவெடுத்துச் செயற்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், வார்த்தைகளில் நிதானம் தேவை.

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் 2025 - 2027


'வாக்கே வாழ்வு' என்ற கூற்றுப்படி எடுத்த காரியத்தையும், கொடுத்த வாக்கையும் காப்பாற்றும் ரிஷப ராசி அன்பர்களே! பணப்புழக்கம் தங்களிடம் தட்டுப்பாடின்றி இருக்கும். உங்களது உழைப்பால் மற்றவர்களை வாழவைப்பீர்கள். யார் உங்களிடம் வாக்குக்கொடுத்தாலும் அதன்படி அவர்கள் நடந்துகொள்ளாவிட்டால் உங்களுக்குக் கோபம்வரும். ஏனென்றால் நீங்கள் தன்மானம் நிறைந்தவர்கள். எந்தச் சூழ்நிலையிலும் அடுத்தவர் மனம் புண்படாதபடி பேசுவதில் வல்லவர் நீங்கள். இந்தச் சனிப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி இருக்கப்போகிறது என்பதைப் பார்ப்போம்.

இந்தச் சனிப்பெயர்ச்சியில் தேக ஆரோக்கியத்தில் கவனம்செலுத்தவேண்டிய சூழ்நிலை உருவாகும். இதனால் உங்களின் செயல்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க இயலாமலும் போகும்.



## கடகம்

**எதிலும் துடிப்புடனும், ஈடுபாட்டுடனும் ஈடுபடும் கடக ராசி அன்பர்களே!**



இதுவரை உங்களது அஷ்டம ஸ்தானத்தில் இருக்கும் சனிபகவான் விலகி பாக்கியஸ்தானத்திற்கு செல்கிறார். மூன்றாம் பார்வையால் இலாப ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் தைரிய வீரியஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் ரண ருண ரோக ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

நீங்கள் வாழ்வில் ஒரு திருப்பு முனையைக் காணலாம். இதுநாள்வரை நீங்கள் சந்தித்து வந்த இழப்புகளில் இருந்து மீண்டு வருவீர்கள். தடைகளைத் தகர்த்து எறிவீர்கள். போராட்டங்கள் மற்றும் எதிர்பாராத இழப்புகளுக்கு ஒரு முடிவை எதிர்பார்க்கலாம்.

**உத்தியோகம் :**
கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு உணர்வின் மூலம் நீங்கள் வெற்றிபெறலாம். உத்தியோகத்தின் மூலம் ஆதாயம்பெற தாமதங்கள் இருக்கலாம் என்றாலும் நீங்கள் நீடித்த ஆதாயம் பெறலாம். முந்தைய போராட்டங்களில் இருந்து மீண்டு வருவீர்கள். உங்கள் பலவீனங்களை அறிந்து நடந்து கொள்வதன் மூலம் உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம்.

**குடும்ப உறவு :**
உங்கள் துணையின் கருத்துக்கு நீங்கள் முக்கியத்துவம் அளிக்கலாம். அதன் மூலம் பரஸ்பரப் புரிந்துணர்வு அதிகரிக்கலாம். இது கருத்துவேறுபாடுகளைக் களைய உதவும். ஒளிவு மறைவின்றிக் கருத்துகளை பரஸ்பரம் பரிமாறிக்கொள்வதன் மூலம் உறவில் பிணைப்பு மேம்படும்.

**நிதிநிலை:**
ஸ்திரமான நிதிநிலை காண வரவு - செலவுகளை பட்ஜெட் அமைத்துச் செயற்படுத்தவும். பணத்தை முதலீடு செய்வதற்கு முன் ஆராய்ந்து செயற்படவும். முதலீடு விஷயத்தில் நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெறவும். ஒரே திட்டத்தில் முதலீடு செய்யாமல் பல்வேறு திட்டங்களில் முதலீடுகளை பரப்பவும். கடன்வாங்குவதைத் தவிருங்கள். அவசியம் தேவை என்றால் உங்களால் திருப்பிச் செலுத்தும் தகுதி அறிந்து அதற்கேற்ப கடன்வாங்குவது நல்லது. எனவே கடன்வாங்கும்போது கவனமாக இருக்கவேண்டும்.

**மாணவர்கள் :**
மாணவர்கள் கடின உழைப்பை மேற்கொள்வதன் மூலம் படிப்பில் வெற்றிகாணலாம். அர்ப்பணிப்பு உணர்வுடன் படிக்கவேண்டியது அவசியம். மாணவர்கள் மனதில் தன்னம்பிக்கை மேம்படும். உங்களின் தனித்துவமான எண்ணங்கள், ஆராய்ச்சிகள் மற்றும் யோசனைகள் மற்றவர்களை ஈர்க்கக் கூடும். உங்கள் பேச்சில் கவனமாக இருங்கள். உங்கள் கல்வி முயற்சிகளில் புதிய உயரங்களை அடையலாம்.

**ஆரோக்கியம் :**
உங்கள் ஆரோக்கியத்தில் கவனஞ்செலுத்துங்கள். மன ஆரோக்கியம் உடல் ஆரோக்கியத்திற்கு முக்கியம். எனவே மன அழுத்தம் இன்றி இருங்கள்.

# பெண்களுக்கான யோகாப் பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 20

"ஆரோக்கிய வாழ்க்கைக்கான யோகாசனப் பயிற்சிநெறி" உதவி மாவட்டச் செயலாளர் உ.தர்சினி தலைமையில் யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தப் பயிற்சிநெறி மாவட்டச் செயலக பெண்கள் சிறுவர் அலகின் ஒழுங்கமைப்பில், மாவட்டச் செயலக கலாசார உத்தியோகத்தர் இ. கிருஸ்ணகுமாரினால் 6 மாத காலத்துக்கு நடத்தப்படவுள்ளது. (ச-25, 9,66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

இன்று அனுபவிக்க முடிந்த ஒன்றை, நாளைவரை தள்ளிவைக்கவேண்டாம்.

—ஜோஷ் பில்லிங்ஸ்—

# குற்றம் அற்றவர் எவரோ அவர் கல்லெறியட்டும்...!


உலக நாடுகள் பலவும் இரட்டை நிலைப்பாட்டுடன் நடந்துகொள்கின்றன என்று நொந்துகொண்டுள்ளார் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர். குறிப்பாக இந்தியாவின் காஷ்மீர் விடயத்தில், உலக நாடுகளினதும், ஐக்கிய நாடுகள் சபையினதும் இரட்டை நிலைப்பாடு பட்டவர்த்தனமாகத் தெரிந்தது என்றும், காஷ்மீரை பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ளது என்று முறையிடுவதற்குச் சென்றால், அங்கு பாதிக்கப்பட்ட தரப்பையும், பாதிப்பை ஏற்படுத்திய தரப்பையும் ஒரே தராசில் வைத்து நடத்துகின்றனர் என்றும் அவர் இயம்பியிருக்கின்றார். இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் வெளிப்படுத்திய கருத்துகள் அத்தனையும் உண்மை. மிகவும் கச்சிதமாகப் பொருந்தக்கூடிய சொற்பதங்களைத் தெரிவுசெய்து, வலிதான கருத்தை அத்தனை நேர்த்தியாக புகுத்தியிருக்கின்றார் அவர். இதற்காக அவரை எத்தனை பாராட்டினாலும் தகும். ஆனால், உலக நாடுகளினதும், ஐக்கிய நாடுகள் சபையினதும் இரட்டை நிலைப்பாடு தொடர்பில் தன் ஆதங்கத்தைக் கொட்டும் ஜெய்சங்கர், தனது நாடு ஈழத்தமிழர்களின் விடயத்தில் எவ்வாறான நிலைப்பாட்டில் நடத்துகொண்டுள்ளது என்ற சுயபரிசோதனையையும் செய்யவேண்டும்.

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இதுவரை மேற்கொண்ட பல வாக்கெடுப்புகளில் இந்தியாவின் உச்சபட்ச நடவடிக்கை, 'வாக்களிப்பை புறக்கணிப்பது' அல்லது 'விலகியிருப்பது' என்பதாகவே அமைந்துள்ளது. பாதிக்கப்பட்ட தமிழர்களையும், போர்க்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட தரப்பையும் சம தராசில் வைத்துப் பேணுகின்ற நிலைப்பாட்டின் வெளிப்பாடல்லவா இது! ஆக, தாங்கள் இராஜதந்திரம் என்ற பெயரிலும், பிராந்திய வல்லாதிக்க இருப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம், அதே நடவடிக்கைகள் இந்தியாவின் கண்களைக் குத்தும்போது அது ஜெய்சங்கர் போன்றோருக்கு வலிக்கின்றது. 'நலிந்ததை வலியது ஆளும்' என்பது படைப்பின் இயல்பு. இது இப்போது 21ஆம் நூற்றாண்டின் அரசியலுக்கும் பொருத்தம். உங்களையே கதியென நம்பி ஓர் இனம் காத்திருக்கும்போது, நீங்கள் அரசியல் சதிராட்டங்களைத்தான் பிரதானப்படுத்துவீர்கள் என்றால், நீங்களும் அத்தகைய நடவடிக்கைகளால் ஆளப்படுவீர்கள்.

இலங்கைக்கு எதிராக இதற்கு முன்னர் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஒன்றின் மீதான வாக்கெடுப்பு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் செப்ரெம்பர் அமர்வில் இடம்பெறவுள்ளதாக ஸ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அண்மையில் வெளிப்படுத்தியிருந்தார். பாதிக்கப்பட்ட தரப்பையும், பாதிப்பை ஏற்படுத்திய தரப்பையும் ஒரே தராசில் வைத்து பார்க்கக்கூடாது என்றுகூறும் இந்தியா, இந்த வாக்கெடுப்பின்போது தமிழர்களின் நலன்களைப் பிரதானப்படுத்தி வாக்களிக்கத் தயாரா?.




## கொழும்புக் கழிவுகளிலிருந்து 10 மெகாவோட் மின் உற்பத்தி



கொழும்பு, மார்ச் 20

கொழும்பு மாநகரக் கழிவுப்பொருள்களில் இருந்து தினமும் 10 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மின்சார உற்பத்திக்கு மேலதிகமாக மீதமாகும் சாம்பலில் இருந்து கட்டட நிர்மாணத்துக்குத் தேவையான சிலிண்டர்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது.

மேல்மாகாணத்தில் தினமும் 3 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் திண்மக்கழிவுகள் சேருகின்றன. கொழும்பில் திண்மக்கழிவகற்றல் பெரும் சவாலாக உள்ள நிலையில், 2017ஆம் ஆண்டு மீதொட்டமுல்லவில் உள்ள குப்பைமேடு சரிந்து வீழ்ந்ததில் 13 பேர் உயிரிழந்தனர். கழிவுகளில் இருந்து நச்சுவாயு வெளியேறுவதும், நிலத்தடி நீர் மாசடைவதும் திண்மக்கழிவகற்றலைச் சிக்கலாக்கியிருந்தது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் திண்மக்கழிவுகளில் இருந்து மின்சாரம் உற்பத்திசெய்யும் திட்டம் செயற்படுத்தப்பட்டது. எய்கென் ஸ்பென்ஸ் என்ற நிறுவனம் இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதன் ஊடாக ஐ.நா. சர்வதேச பருவநிலை தொடர்பான பாதுகாப்பு அணியில் இணைந்துகொண்ட முதலாவது இலங்கை நிறுவனமாக எய்கென் ஸ்பென்ஸ் மாறியுள்ளது. (எ-6)

## கட்டுப்பணம் காலம் நிறைவு

கொழும்பு, மார்ச் 20

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் காலம் நேற்றுப் புதன்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்துள்ளது என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் வைப்புத்தொகை ஏற்றுக்கொள்ளல் கடந்த 3ஆம் திகதி ஆரம்பமாகியது.

அதேவேளை, உள்ளாட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வது இன்று நண்பகல் 12 மணியுடன் முடிவடையவுள்ளது என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

## தேசபந்துவின் வீட்டில் மதுப்போத்தல்கள்

கொழும்பு, மார்ச் 20

தேசபந்து தென்னக்கோனுக்குச் சொந்தமான சொத்துகளை அடையாளங் கண்டு பட்டியலிடும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளனவெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேசபந்து தென்னக்கோனுக்கு சொந்தமான ஹோகந்தரப் பகுதியிலுள்ள வீடு குற்றப்புலனாய்வுத்திணைக்கள அதிகாரிகளால் நேற்று சோதனையிடப்பட்ட போது 214 வைன் போத்தல்கள் உட்பட ஆயிரத்து 9 மதுபானப் போத்தல் கள், கைத்துப்பாக்கி மற்றும் அப்பிள் கைபேசிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். (ச-44)

## பொருளாதாரம் வளர்ச்சி

கொழும்பு, மார்ச் 20

2024 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கையின் பொருளாதாரம் 5 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளதாகப் புள்ளிவிவரத்திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)



## இலங்கைத் தேர்தலில் ஜேர்மன் பெண்

கொழும்பு, மார்ச் 20

இலங்கை குடியுரிமை பெற்ற ஜேர்மன் பெண்ணொருவர் உள்ளாட்சி சபைத் தேர்தலில் களமிறங்கவுள்ளார்.


மாத்தளை மாவட்டத்தில், கலேவெல பிரதேசசபைக்கு சுயேச்சையாகப் போட்டியிடுவதற்குரிய கட்டுப்பணத்தை அவர் செலுத்தியுள்ளார்.

தனது அரசியல் ஈடுபாட்டின் மூலம் இலங்கையில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ச-44)



நாளை
வெள்ளிக்கிழமை - பங்குனி - 07
21.03.2025
சுபநேரம் : 06.17 - 07.47
ராகுகாலம் : 10.47 - 12.17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இப்படி இருக்கையில் எப்படி இருப்பது?

வவுனியா, மார்ச் 20
வவுனியா புதிய பேருந்துநிலைய இருக்கைகள் பழுதடைந்து உடைந்து பயன்படுத்தமுடியாத நிலையில் காணப்படுகின்றன. இதனால் வயோதிபர்கள் உள்ளிட்டோர் பெரும் அசௌகரிகத்தை எதிர்நோக்குகின்றனர் என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வவுனியா மத்திய பேருந்துநிலையத்தில் காணப்படும் இருக்கைகள் பழுதடைந்து உடைந்து காணப்படுவதால் பயணிகள் அதில் அமர்வதில்லை.
நீண்டநேரம் எழுந்துநிற்கமுடியாதவர்கள், வயோதிபர்கள் உள்ளிட்டோர் குறித்த இருக்கையில் அமரும்போது உடலில் காயங்களுக்குள்ளாகின்றனர்.
வடமாகாணத்தின் பிரதான நுழைவாயிலாகவும், பல மாவட்டங்களில் வந்து செல்வோர் அதிகமாகக் கூடும் இடமாகவும் இந்தப் பேருந்துநிலையம் காணப்படும் நிலையில் உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்தி புதிய இருக்கைகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-27)

## புதிய பணிப்பாளர்சபைத் தெரிவு


யாழ்ப்பாணம், மார்ச் 20
யாழ்.மாவட்ட பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தின் விசேட பொதுக்கூட்டம் சமாசத்தின் கூட்டுறவாளர் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.
நிகழ்வில் சமாசத்தின் புதிய பணிப்பாளர் சபைத் தெரிவுகளில் தலைவராக சி.சுதர்சன், உபதலைவராக க.துரைசிங்கம், செயலாளராக சி.ஜெகதீஸ்வரன், பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக இ.பிரதீப், மா.ஜெயம், சி.நந்தகுமார், சி.சிவகுமார், போ.பொல்வின் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ச-41-63)

# யாழ்ப்பாணம் - காரைநகர் வீதி திருத்தப்பணி முழுமையில்லை

### மக்கள் அதிருப்தி

**யாழ்ப்பாணம், மார்ச் 20**
**யாழ்ப்பாணம் - காரைநகர் மானிப்பாய் வீதியில் மதகுகள் புனரமைக்கப்படாது அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது குறித்த வீதியின் மேற்புறத்தில் பாதசாரிக்கடவைகள் உள்ளிட்ட வர்ணம் பூசும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனூடாக வீதி அபிவிருத்திப் பணிகள் நிறைவு பெற்றன என்பதைச் சித்திரிக்க யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை முற்படுகின்றதா? என்று பொதுமக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.**

கடந்த பொருளாதார நெருக்கடியான காலப்பகுதியில் குறித்த வீதிப்புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு பொருளாதார நெருக்கடியின் நிமித்தம் பணிகள் கைவிடப்பட்டிருந்தன.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்சி மாற்றங்களைத் தொடர்ந்து 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த வீதி காப்பெற் வீதியாகச் செப்பனிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.
இதில் குறிப்பிட்ட சில கிலோமீற்றர் வீதி பழையவீதியை அவ்வாறே ரொண்டே தற்காலிகமாகப் புனரமைக்கப்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்தது.
மேலும் வீதியில் சில பகுதிகள் அகலிக்கப்பட்டபோதிலும் அகலிக்கப்பட்ட வீதிகளின் அருகில் காணப்படுகின்ற மின்கம்பங்கள், தொலைத்தொடர்புக் கம்பங்கள் இதுவரை இடமாற்றப்படவில்லை.
அத்துடன் குறித்த வீதியின் சித்தன்கேணி - பொன்னாலை வரையான பகுதியில் பழைய மதகுகள் இடித்து அழிக்கப்பட்டு புதிய மதகுகள் அமைக்க நிலம் அகழப்பட்டது. எனினும் பின்னர் அவை புனரமைக்கப்படும் எனத் தெரிவித்து குறித்த மதகுகள் கற்கள் மற்றும் மண்ணால் நிரவப்பட்டு அதன் மேலே காப்பெற் வீதி போடப்பட்டது.
இந்தநிலையில் தற்போது காரைநகர்- யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் வர்ணம் பூசும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இதனூடாக குறித்த வீதி முழுமையாகப் பு[illegible]மைக்கப்பட்டதாக சித்திரித்து [illegible]திப்பணிகளை நிறைவுறுத்த வீதி அபிவிருத்தி அதிகார சபை முனைகிறதா? என மக்கள் கேள்வியெழுப்பியுள்ளதுடன் குறித்த வீதியில் காணப்படும் புனரமைக்கப்படாத மதகுகளையும் புனரமைப்பது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம்செலுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-125)



## பிரிட்டன் தூதுக்குழுவினருடன் உதயன் குழுமத்தலைவர் சந்திப்பு

கொழும்பு, மார்ச் 20
பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரூ பற்றிக் மற்றும் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல்சார் முதன்மைச் செயலர் ரொம் சோப்பர் ஆகியோருக்கும் உதயன் குழுமத் தலைவர் ஈஸ்வரபாதம் சரவணபவனுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் இரவு காலிமுகத்திடலில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.
'பிரித்தானியா - இலங்கை நாடுகளுக்கிடையிலான கூட்டுறவு' எனும் தொனிப்பொருளில் இந்த சிநேகபூர்வக் கலந்துரையாடல் இடம்பெற்றது.
இதன்போது சமகால நிலைவரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. (ச-125)

## பட்டங்கள் பெறும் வாழ்வக மாணவர்கள்



யாழ்ப்பாணம், மார்ச் 20
யாழ். பல்கலைக்கழகத்தின் 39 ஆவது பட்டமளிப்பு விழாவில் சுன்னாகம் வாழ்வக நிறுவனத்தின் பழைய மாணவரான வி.விஜயலாதன் பொது நிர்வாகத் துறையில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.
அதே வாழ்வகத்தின் மாணவர்களான த. அமலநிதுசன், திருமதி வானுஜா பிரகான் ஆகியோர் பொதுக் கலைமாணிப் பட்டத்தை இன்று பெற்றுக்கொள்ளவுள்ளனர். (ச-25)



## வடமராட்சியில் கசிப்புக்கோட்டை முற்றுகை

யாழ்ப்பாணம், மார்ச் 20
யாழ்ப்பாணம் வடமராட்சி நாகர்கோவில் பகுதியில் கசிப்புக்காய்ச்சுமிடம் சுற்றிவளைக்கப்பட்டு கடந்த திங்கட்கிழமை இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து இரண்டு பரல் கோடா, இருபது லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்புத் தயாரிக்கும் உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.
காங்கேசன்துறை மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இருவரும் மருதங்கேணிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.
சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த மருதங்கேணிப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-26)



## சிறுகதை நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், மார்ச் 20
எழுத்தாளர் தியா காண்டீபனின் 'அமெரிக்க விருந்தாளி' சிறுகதை நூல் அறிமுக நிகழ்வு மூத்த சட்டத்தரணி சி.அ.யோதிலிங்கம் தலைமையில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் நூலாசிரியர் காண்டீபன் நூலை வெளியிட்டுவைக்க மன்னார் பரிகாரிக்கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் அதிபர் இ.மகேஸ்வரராஜ் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்துக்கு விஸ்தரிக்கப்படும் DPL பல் பயனாளிகள் பண்டகசாலைக்கு அடிக்கல்







இலங்கையின் முன்னணி லொஜிஸ்டிக் தீர்வு வழங்குநரும், டேவிட் பீரிஸ் குழுமத்தின் அங்கத்தவருமான டிபி லொஜிஸ்டிக்ஸ் (பிரைவட்) லிமிட்ட் நிறுவனத்தின் (DPL) மற்றுமொரு வளர்ச்சிக்கட்டமாக யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக பல் பயனர் 3PL பண்டகசாலை அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது. குழுமத்தின் வடக்கு அபிவிருத்தித்திட்டம் மற்றும் வடமாகாணத்தின் பொருளாதாரத்தை வளர்ப்பதில் DPL நிறுவனம் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதன் ஓர் அங்கமாக இந்த முயற்சி அமைந்துள்ளது.

இல 202/21, கட்டுவன் மயிலிட்டி வீதி, மயிலிட்டி, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இந்தப் பண்டகசாலைத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. DPL நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கெலும் கட்டம்பேஆரச்சி, DPMC அசட்லைன் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்ட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சமில்க அம்பகஹாவத்த ஆகியோர் அடிக்கல் நாட்டிவைத்ததுடன், டேவிட் பீரிஸ் குழும நிறுவனங்களின் அதிகாரிகள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

இந்தப் புதிய வசதியானது பிராந்தியத்தில் விநியோகச் சங்கிலி மற்றும் பண்டகசாலைக்கான வசதிகளை விஸ்தரிப்பதுடன், உள்நாட்டு வணிகங்களுக்கு ஒத்துழைப்பாகவும், பிராந்திய வணிகத்துக்கு உந்துசக்தியாகவும் அமையும். 30 ஆயிரம் சதுரஅடியைக் கொண்டதாக அமையவிருக்கும் இந்தப் பண்டகசாலையானது பல்வேறு தொழிற்றுறையினருக்கு உதவக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டிருப்பதுடன், நம்பகத்தன்மை, விரிவாக்கத்தன்மை மற்றும் செலவுச் சிக்கனமான களஞ்சியப்படுத்தல் தீர்வுகளை வழங்கும். அது மாத்திரமன்றி வடக்குப் பிராந்தியத்தில் வணிகங்களுக்கான புதிய வாய்ப்புகளையும் உருவாக்கும்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த DPL நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கெலும் கட்டம்பேஆரச்சி, "இலங்கையின் வடபகுதியில் காலடித் தடத்தைப் பதிப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைவதுடன், இது பொருளாதார முன்னேற்றத்தில் கணிசமான பங்களிப்பைச் செலுத்தும் என்பது எமது அசையாத நம்பிக்கையாகும். வடக்குப் பகுதியில் அமைக்கப்படவுள்ள முதலாவது பல் பயனர் பண்டகசாலையாக இது அமையும். இதன் கட்டுமாணங்களை ஆறு மாதங்களுக்குள் பூர்த்திசெய்ய எதிர்பார்க்கின்றோம். இந்தப் பண்டகசாலையானது அதிநவீன லொஜிஸ்டிக் தீர்வுகளை வழங்கி உள்நாட்டு மற்றும் சர்வதேச வணிகங்களுக்குச் சிறந்த பணியாற்றும்" என்றார்.


விமான நிலையம், துறைமுகம் மற்றும் பிரதான வணிக மையங்களுக்கு மிகவும் அருகாமையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இந்தப் பண்டகாசலை அமையவிருப்பதால், பிராந்தியத்துக்கான பெறுமதிமிக்க முதலீடாக இது காணப்படுகின்றது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இரண்டு தசாப்தங்களுக்கு மேல் தொழிற்றுறை அனுபவத்தைக் கொண்டுள்ள டிபி லொஜிஸ்டிக்ஸ் (பிரைவட்) லிமிட்ட் நிறுவனம், பண்டகசாலை வசதி, லொஜிஸ்டிக் மற்றும் சர்வதேச ரீதியில் சரக்குகளை அனுப்புதல் உள்ளிட்ட விரிவான விநியோகச்சங்கிலி முகாமைத்துவத் தீர்வுகளை வழங்கிவருகின்றது. இந்த நிறுவனம் 3PL மற்றும் 4PL சேவைகளில் நிபுணத்துவத்தைக் கொண்டிருப்பதுடன், பல்வேறு வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் தேவைக்கு ஏற்ப தனிப்பயனாக்கப்பட்ட ஒருங்கிணைந்த உடனடி லொஜிஸ்டிக் தீர்வுகளை வழங்கிவருகின்றது. யாழ்ப்பாணத்தில் அமையவிருக்கும் இந்தப் புதிய பண்டகசாலையானது லொஜிஸ்டிக் துறைக்கான இலங்கையின் உட்கட்டுமானத்தில் புரட்சியை ஏற்படுத்துதல் மற்றும் இத்தொழிற்றுறையில் நம்பிக்கை பெற்ற முன்னணியாளர் என்ற தனது நிலையை மீண்டும் உறுதிப்படுத்துவது ஆகிய DPL நிறுவனத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான மற்றுமொரு முயற்சியாகும். (எ-26)

# யாழ். பல்கலைக்கழக 39 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா ஆரம்பம்







யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா நேற்றுப் புதன்கிழமை காலை பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் சிறப்பாக ஆரம்பமானது.

நேற்று ஆரம்பமான பட்டமளிப்பு விழா எதிர்வரும் சனிக்கிழமை வரையான நான்கு நாள்களிலும் மொத்தமாக 13 அமர்வுகளாக இடம்பெறவுள்ளதுடன் 3920 மாணவர்கள் இந்தப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்[illegible] (ச-66,125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 11 . 1942

மறைவு 19 . 03 . 2025



## மேரி சமா தேவநாயகம்

**(முன்னாள் உப அதிபர், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)**

யாழ் பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் ரொரோன்டோ கனடாவை வதிவிடமாகவும் கொண்ட மேரி சமா தேவநாயகம் (முன்னாள் உப அதிபர், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) அவர்கள் கடந்த 15.03.2025 ரொரோன்டோவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டானியேல் சங்கரப்பிள்ளை - புளோரா பொன்னம்மா தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பீற்றர் சந்தியாகோ சிங்கநாயகம் - லில்லி நேசம் தம்பதியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இம்மானுவேல் தேவநாயகம் சிங்கநாயகம் (யாழ் வர்த்தக வங்கி) அவர்களின் ஆருயிர் மனைவியும், டிவினியா, மேவின், டெறின் ஆகியோரின் பாசமிகு அன்னையும், Fenton (ரவி), மாலினி, எரிக் அகியோரின் அன்பு மாமியாரும், ரொஷீன், அஞ்சு, ஆரணி, மிரோன், மிரண்டன், மிஷோன், எலீனா ஆகியோரின் பாசமிகு பாட்டியும், காலஞ்சென்ற அமுதராணி மற்றும் புஷ்பராணி, காலஞ்சென்றவர்களான செல்வராஜா, குணநாயகம், கருணைராணி, இந்திராணி, இராஜநாயகம் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்வசாமி, பத்மினி, சௌந்தரநாயகம், இராஜநாயகம், மற்றும் சத்தியநாதன், அன்னவதனி, அரசநாயகம், பத்மினி , செல்வநாயகம், கலா, வனிதா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/57771) J-1

தகவல் :
**குடும்பத்தினர்**


3 Trefoil ct,
Scarborough, ON MIX 1X7

மேவின் தேவநாயகம் - +1 416- 292 8843

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த 18.02.2025
செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## தம்பிராசா சண்முகலிங்கம்



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (18.03.2025) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (20.03.2025) வியாழக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்**

எமது குடும்பத்தலைவர் எம்மையெல்லாம் விட்டு இறையடி சேர்ந்த நேரத்தில் எமக்கு பல்வேறு வழிகளிலும் உதவிக்கரம் நீட்டிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**

**074 216 3926, 077 886 7258, 077 301 3766**

**சியாமளா மில் லேன்,
மீசாலை வடக்கு,
மீசாலை**

# ஸ்ரீமாவோவுக்கு அநீதி தவறான முடிவே!

## ஐ.தே.க. வருத்தம்

கொழும்பு, மார்ச் 20

உலகின் முதலாவது பெண் பிரதமரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமை ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் பறிக்கப்பட்டமை தவறான முடிவாகும் என்று அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினரான முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீமாவோ அம்மையாரின் குடியுரிமையைப் பறிப்பது தொடர்பில் கருத்தாடல் இடம் பெற்றது.

எனது தந்தை காமினி திஸாநாயக்க இதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டார். எனினும், தனக்குள்ள பெரும்பான்மையைப் பயன்படுத்தி ஜே.ஆர்.ஜயவர்தன அதனைச் செய்தார். அதே போல சர்வஜன வாக்கெடுப்புமூலம் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமையும் தவறான தீர்மானமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ச-44)

# பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 . 11 . 1935

மறைவு 22 . 03 . 2014



## அமரர் தம்பு நடேசு

(Retired Senior Tax Officer, Department of Inland Revenue)

**திதி: அபரபக்க சஷ்டி (20.03.2025)**

**அய்யா நீங்கள் எமைப் பிரிந்து பதினொரு ஆண்டுகள்
கடந்து சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் இதயங்களில் என்றும்
உயிர்ப்பாய் நிலைத்திருக்கும்.
காலங்கள் கரைந்தாலும்
ஆயிரம் உறவுகள் அருகிருந்தாலும் எம்
கண்களில் ஒளிரும் உங்கள் அன்பின் வெளிச்சம்.**

381, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS/57760) J-1

# மரண அறிவித்தல்

## செல்வி யாழினி நடராசா



**தோற்றம் 01.12.1978**

**இறப்பு 19.03.2025**

ஈஸ்வரம்ஸ் அல்வாய் கிழக்கு அல்வாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி யாழினி நடராசா (முன்னாள் அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம்-பளை) நேற்று (19.03.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் கிருஸ்ணபிள்ளை நடராசா (மேனாள் அதிபர் யா/ நெல்லியடி மத்திய கல்லூரி, யா / உடுப்பிட்டி அ.மி கல்லூரி ) ஈஸ்வரதேவி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும் சாளினி, இளங்குமரன் ஆகியோரின் சகோதரியும் கலாநிதி , கேதீசன் ,கிருத்திகா ஆகியோரின் மைத்துனியும் கஜலக்சன் , புவீனா ஆகியோரின் சித்தியும் அவனேஸ் , மீனாட்சி , ஆரணா ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்ற ஈஸ்வரதாசன் மற்றும் ஈஸ்வரமோகன், குகேஸ்வரன் , உதயகுமார் ஆகியோரின் பாசமிகு மருமகளும் சரோஜினி , தயாரஞ்சினி காலஞ்சென்றவர்களான குணசிங்கராசா , அருணகிரிராசா , சிவராசா மற்றும் தவராசா, செல்வராசா , சண்முகராசா , ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2025) வியாழக்கிழமை காரல 7.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**074 280 0465**

(CS 24619)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 04.04.1944 மறைவு 19.03.2025

எமது பாடசாலையின் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
திருமதி சுதாஜினி சிவராசா அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் திருமதி தங்கராசா இராசலட்சுமி**

இறைபதம் அடைந்த செய்திஅறிந்து துயருருகிறோம் தாயாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்திப்பதோடு இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பாடசாலை சமூகம்
யா/மண்டைதீவு றோ.க வித்தியாலயம்

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 1940



மறைவு 14.03.2025

எமது ஆலய தீவிர பக்தையாகிய

**சுந்தரமூர்த்திசர்மா புவனேஸ்வரி**

அவர்கள் காலமான செய்தி கேட்டு
அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

நகுல நவராஜா உமாபதீஸ்வரக் குருக்கள்
ஆதினகர்த்தா
ஸ்ரீமகா முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், கீரிமலை

(CS/2768) J-1



### செயற்கை நுண்ணறிவு

# செயமலர்வு

யாழ்ப்பாணம் , மார்ச் 20

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கான செயல மர்வு யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

செயலமர்வில் உத்தியோகத்தர்களுக்குச் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் என்றால் என்ன? என்பது தொடர்பிலும், அதன் முக்கியத்துவம் மற்றும் அரச அலுவ லகங்களில் அதன் தேவைப்பாடு மற்றும் பயன்பாடுகள் தொடர்பிலும் விளக்க மளிக் கப்பட்டது.

இதில் றுகுணுப் பல்கலைக்கழகப் பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நளின் விஜ யசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளரும், றுகுணு பல்கலைக்கழக சமூக நல்லிணக்க நிலையப் பணிப்பாளருமான கலாநிதி.சுரேன்ஜித் குண சேகர, மாவட்ட, பிரதேச செயலகத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் கள் உட்பட யாழ் மாவட்டச் செயலக உத்தியோ கத்தர்களும் கலந்துகொண்டனர். (ச-22,66)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

வலிகாமம் கிழக்கு கோப் பாய்ப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 16 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் கோப் பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளைமறுதினம் சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள் ளது.

சங்கத்தின் தலைவர் முத் துசாமி விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெ றவுள்ள கூட்டத்தில் பிர தம விருந்தினராக கோப் பாய் பிரதேச செயலர் சண்முகராசா சிவஸ்ரீ கலந்துகொள்ளவுள் ளார். (ச-25)

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 04 . 1944



மறைவு 19 . 03 . 2025

**தங்கராசா இராசலட்சுமி**

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், சுதுமலையை வதிவிடமாகவும் கொண்ட தங்கராசா இராசலட்சுமி அவர்கள் நேற்று (19.03.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நடராசா - இராசம்மா தம்பதியின் இளைய மகளும், தங்கராசாவின் அன்பு மனைவியும், லிங்காயினி, பிரபாகரன், தயாபரன், குருபரன், சுதாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிறீஸ்கந்தராசா, ராணி, கலாயோதி, நிர்மலா, சிவராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஷஜீதன், கிருபன், தனுசன், துளசிகன், சச்சுதன், பரணிதா, நாவினி, பவரீசன், சர்மிளா, புருசோத்தமன், சிவாம்சன், பிராம்மினி ஆகியோரின் பேர்த்தியும், குணசா, டில்சன், வர்சன், ஜெக்ஸ்வின், ஆருசன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (20.03.2025) வியாழக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 923 1602

அண்ணாமலை வீதி,
சுதுமலை தெற்கு.

(CS/2770) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 10 . 1944



மறைவு 19 . 03 . 2025

**றொபேட் மேரிநிர்மலா (சின்னத் தங்கச்சி)**

நீதிமன்ற வீதி மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட றொபேட் மேரி நிர்மலா அவர்கள் நேற்று (19.03.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணர் - தெய்வானை தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஜோண் செல்லையா - பாக்கியம் தம்பதியின் அன்பு மருமகளும், றொபேட் (பப்பா) அவர்களின் பாசமிகு மனைவியும், ஜெராட், ஜோண்ஸ்ரீபன் (மோகன்), தயாபரி, ஜெயகௌரி, துவாரகா, ஏமி, ரொனி, சீவ்டன் ஆகியோரின் அன்புத் தாயும், சியாமளா, றோஸ்மாலா, அருள்சீலன், எட்பேட்பொன்பீலியஸ், தேவராசா, ஜெயதாஸ், ஜெயபாரதி, பியாட்றிஸ் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற நல்லதம்பி, பொன்னையா தெய்வேந்திரம் (தேவர்), இரத்தினம் தங்கப்பிள்ளை, சிவகுரு ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற எட்வேட், விக்ரர், சாளட் மற்றும் லோறன்ஸ், காலஞ்சென்ற ஆதர் மற்றும் இன்பராணி, டொறத்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சாளட், நிரோசன், அனுஷன், ஒரிற்றா, மெலனி, டெபோறா, அஜின் லௌரிசன், எல்ரன், எரிக்கா, சயின் ஜோபேட், ஜெட்றிக் ஜெய்சன், மெலிஷாகிளாரா, மெல்வின் கிளேயர் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி நாளை (21.03.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித மிக்கேல் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஏமி - 077 706 1667
ரொனி - 077 066 1110
சீவ்டன் - 077 617 6458
துவாரகா - 077 476 8589

உரும்பிராய் கிழக்கு.

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




செல்வன்
குகதாஸ் துவாரகன் BBA
அவர்கள் இன்று (20.03.2025) வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக 39 ஆவது பட்டமளிப்பு விழாவில் Bacholor of Business Administration பட்டம்பெறுவதையிட்டு அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம். இவர் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்பாக வாழ வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்: அப்பம்மா
சிறி சித்தப்பா குடும்பம்
சேகர் சித்தப்பா குடும்பம்
மயூர் சித்தப்பா குடும்பம்

(CR/44613) J-1


## சாவகச்சேரி மக்களுக்கு சுத்திகரித்த குடிதண்ணீர்



மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரை வழங்கும் நோக்குடன் அமரர்களான பொன்னு பழநி, புவனேஸ்வரி தம்பதியினரின் ஞாபகார்த்தமாக அவரது உறவினர்களால் சாவகச்சேரிப் பேருந்து நிலையத்தில் குடிநீர்த் தாங்கி அமைக்கப்பட்டுள்ளது. இந்த குடிநீர்த்தாங்கியை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா திறந்துவைத்தார். கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்குச் சாவகச்சேரி சிவன் கோயில் தீர்த்தக் கிணற்றில் இருந்து நீர் பெற்றுக்கொள்ளத் தொல்லியல் திணைக்களம் அனுமதி வழங்காத நிலையில் முன்னாள் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா அனுமதியைப் பெற்றுக்கொடுத் தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-33-27)

# INVITATION FOR BID 2025/03
# Regional Directorate of Health Service Jaffna.

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Director of Health Services, Regional Directorate of Health Services, Health village pannai, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. Qualification requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 5 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Directorate of Health Services, health village pannai Jaffna. (T.P:0212227889, Fax: 0212220822) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, Health village pannai, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, Health village pannai, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table

| CATEGORY II | Document Issuing/Purchasing Period | From 20.03.2025 until 02.04.2025 |
|---|---|---|
| | Pre-Bid Conference | At 2.30 P.M on 27.03.2025 |
| | Closing and Opening of Bids | At 10.30 A.M on 03.04.2025 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Validity Period |
|---|---|---|---|---|---|---|---|
| NP/04/41/2025/REC/W/05 | Fitting of Racks for RDHS Office New Building (Balance Work) at RDHS Office Jaffna | 2.54 | 84Days | C8 or above (Buildings) | 3,500.00 | 26,000.00 | Till 19.06.2025 |
| NP/04/41/2025/REC/W/06 | Repair and Renovation of Toilet and Wash room at ward No.09 Base Hospital Tellippalai,Jaffna. | 1.29 | 73Days | C9 or above (Buildings) | 1,500.00 | 13,000.00 | Till 19.06.2025 |
| NP/04/41/2025/REC/W/07 | Repair and Renovation of Toilet and Wash room at ward No.11 Base Hospital Tellippalai,Jaffna. | 1.38 | 74Days | C9 or above (Buildings) | 1,500.00 | 14,000.00 | Till 19.06.2025 |
| NP/04/41/2025/REC/W/08 | Extension and Renovation work at Base Hospital Tellippalai,Jaffna-EU | 1.01 | 71Days | C9 or above (Buildings) | 1,500.00 | 11,000.00 | Till 19.06.2025 |
| NP/04/41/2025/REC/W/09 | Completion of Car Parking and Motor Bike Park at Base Hospital Kayts,Jaffna. | 1.49 | 75Days | C9 or above (Buildings) | 1,500.00 | 15,000.00 | Till 19.06.2025 |
| NP/04/41/2025/REC/W/10 | Improvement to Internal Access to MO Quarters at Base Hospital BH Tellippalai(0.115Km) | 4.47 | 91Days | C8 or above (Highway) | 3,500.00 | 45,000.00 | Till 19.06.2025 |

Chairman
Regional Procurement Committee
Regional Directorate of Health Service, Jaffna

(CR/44617) J-1

# இலவுகாத்த கிளிகளா வடக்கு மீனவர்கள்?

*மீனவ அமைப்புகள் கேள்வி*

யாழ்ப்பாணம், மார்ச் 20

அட்டைப் பண்ணை பிரச்சினை உட்பட மீனவர்கள் தொடர்பான அனைத்து பிரச்சினைகள் குறித்தும் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை. மீனவ சமூகத்தால் எப்போதோ நிராகரிக்கப்பட்ட மீன்பிடிச் சட்டத்தை மீண்டும் கொண்டுவர அரசு முயற்சிக்கின்றது என்று வடக்கு மாகாண மீனவ அமைப்பின் பிரதிநிதி நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

வடமராட்சியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமிழ் மக்களுக்கு உறுதியளித்தது போன்று எதனையும் செய்யவில்லை. மீனவர்கள் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடல்கள் நடந்தபோதும் இதுவரை தீர்வு கிட்டவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25,27)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்




யா/கைதடி குருசாமி வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்
திருமதி . கோகிலா கேதீஸ்வரன்
[ SLTS - I, B.A, SP.Trd ( Primary), PGDE,MED (2nd Upper) ]
அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 20.03.2025 வியாழக்கிழமை அன்று நடைபெறுகின்ற 39வது பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் முதுமாணி M.Ed( 2nd upper) பட்டம் பெற்றுக்கொள்வதனை அகமகிழ்ந்து பாராட்டுவதுடன் மேலும் பல பட்டங்களையும் பதவி உயர்வுகளையும் பெற்றுயர மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கைதடி குருசாமி வித்தியாலயம்
கைதடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 20

வடமராட்சி - புறாபொறுக்கி பகுதியில் உள்ள காணியொன்றுக்குள் இருந்து ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலத்தை அவதானித்த மக்கள், அதுதொடர்பில் பொலிஸாருக்கு வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே அந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் யாரென அடையாளம் காணப்படவில்லை. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-26)

பரீட்சை எழுதிவிட்டுத் திரும்பிய

# மாணவன் மீது குழுத்தாக்குதல்

கொழும்பு, மார்ச் 20

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை எழுதிவிட்டுத் திரும்பிய மாணவன் மீது குழுவொன்றால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் வெலிகம பகுதியில் இடம்பெற்றுள்ளது. பொலிஸாரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-இ)

## தேர்தல்...

உள்ளூராட்சி சபைகளுக்கு கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கை நேற்றுப் புதன்கிழமை மதியத்துடன் நிறைவுபெற்றுள்ளது. வேட்புமனுக்கள் இன்று மதியம் வரையில் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. நண்பகல் 12 மணியுடன் வேட்புமனு ஏற்பு நிறைவுபெறும். ஆட்சேபனைக்கு ஒரு மணிநேரம் வழங்கப்படும். அதன் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவால் ஊடகச் சந்திப்பு ஊடாக தேர்தல் திகதி அறிவிக்கப்படவுள்ளது.

வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டு 35 நாள்களுக்குப் பிறகே தேர்தலுக்குரிய நாள் அமையவேண்டும். அந்தவகையில் ஏப்ரல் 26 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படக்கூடும் என்று தெரியவருகின்றது. (அ-ம-44)

## முல்லையில்...

உள்ளூராட்சித் தேர்தலுக்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் 44 தரப்புகள் இம்முறை கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் திருமதி எஸ். சிந்துஜா உதயனுக்குத் தெரிவித்தார்.

11 கட்சிகளும் 9 சுயேச்சைக் குழுக்களுமே இவ்வாறு கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன என்றும் மேலும் அவர் தெரிவித்தார். (அ-ம-125)

## கிளிநொச்சியில்...

கிளிநொச்சி மாவட்டத்தில் 30 தரப்புகள் உள்ளூராட்சித் தேர்தலுக்காக கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் வேலாயுதம் சிவராஜா உதயனுக்குத் தெரிவித்தார்.

6 சுயேச்சைக் குழுக்களும், 10 கட்சிகளுமே இவ்வாறு கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன. இதேவேளை, நீதிமன்ற வழக்குகளால் தேர்தல் அறிவிப்புத் தாமதமடைந்த பூநகரி பிரதேச சபைக்கு கட்டுப்பணத்தைச் செலுத்தும் காலம் எதிர்வரும் 27ஆம் திகதி 12 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (அ-ம-125)

## வவுனியாவில்...

உள்ளூராட்சித் தேர்தலுக்காக வவுனியா மாவட்டத்தில் ஐந்து சபைகளுக்குமாக 71 தரப்புகள் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன என்று வவுனியா மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் காணப்படுகின்ற 5 உள்ளூராட்சி மன்றங்களுக்காக 16 கட்சிகளும், 16 சுயேச்சைக் குழுக்களும் 71 கட்டுப்பணங்களைச் செலுத்தியுள்ளன. நான்கு வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (அ-ம-110-125)

## இந்திய...

மீனவர்கள் ஆறு பேரில் இருவருக்கு சிறைத்தண்டனையும், நால்வருக்கு ஒத்திவைத்த சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் கைதுசெய்யப்பட்ட இந்த மீனவர்கள் தொடர்பான வழக்கு, ஊர்காவற்றுறை நீதிவான நீதிமன்றத்தில் நீதவான் நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஆறு மீனவர்களில் நால்வருக்கு ஆறு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டுவருட சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. படகோட்டிகளான இரண்டு மீனவர்களுக்கு ஆறு மாதங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அத்துடன் இருவருக்கும் தலா நான்கு மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத்தைச் செலுத்தத் தவறினால் மேலும் 3 மாத சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (அ-ம-27)

## பட்ஜெட்...

மாதம் 17ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

கடந்த மாதம் 18ஆம் திகதி முதல் 25ஆம் திகதிவரை 7 நாள்கள் ஒதுக்கீட்டுச் சட்டவரைவு மீதான இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதம் நடைபெற்றது. இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பின் போது 109 மேலதிக வாக்குகளால் சபையில் வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 155 வாக்குகளும், எதிராக 46 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதன்பின்னர் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் கடந்த 27ஆம் திகதி முதல் நாளை 21ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. நாளை மாலை வரவு செலவுத்திட்டத்தின் மூன்றாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. (அ-எ-44)

## இந்தியப்பிரதமர்...

கடற்படையினர், இந்திய மீனவர்கள் மீது தொடர்ச்சியாகத் தாக்குதலை நடத்திவருகின்றனர். ஆனால், பிரதமர் மோடியோ இலங்கைக்குச் சென்று அங்கு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்துவைக்கவுள்ளார். இந்திய மீனவர்கள் மீதான இலங்கையின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், பிரதமர் மோடி தனது இலங்கைப் பயணத்தைக் கைவிட வேண்டும்.

இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இலங்கைக்குச் சென்று அந்த நாட்டின் ஆட்சியாளர்களைச் சந்தித்தார். இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரும் இலங்கைக்குச் சென்றிருந்தார். ஆனால், எந்தப் பயனும் ஏற்படவில்லை. இவ்வாறிருக்கையில், தற்போது எதற்காக பிரதமர் மோடி இலங்கைக்குச் செல்லவேண்டும்?

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக இந்தியக் கடற்படையும், இந்திய அரசாங்கமும் காத்திரமான நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, இனிமேலாவது இந்தியத் தலைவர்கள் இலங்கைக்கு ஓடியோடிச் செல்லாமல், அந்த நாட்டவர்களை இங்கே வரவழைத்துப் பேச வேண்டும்-என்றார். (அ-ம-இ)

## கைதுசெய்யச்...

திருந்த நிலையில், நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமைய சந்தேகநபரைக் கைது செய்வதற்குச் சென்றபோதே, அவர் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பியோடியுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான பொலிஸ் உத்தியோகத்தர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார். (அ-ம-27)

## பரீட்சை...

பாடசாலைகளின் பரீட்சை நிலையமாகச் செயற்பட்டு வருகின்றது. அங்கு நேற்றுக் காலை 7:30 மணியளவில் இரு பாடசாலை மாணவர்களிடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இது கைகலப்பாக மாறியிருந்த நிலையில் பரீட்சை நிலைய கண்காணிப்பாளர்களால் நிலைமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனாலும் முதலாம் பகுதி வினாத்தாள் நேரம் முடிவடைந்த நிலையில், நண்பகல் 11:15 மணியளவில் வெளியில் இருந்து ஒரு தரப்பு பரீட்சை நிலைய வளாகத்தினுள் அத்துமீறி நுழைந்து மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

இதனையடுத்து பரீட்சை நிலைய மேற்பார்வையாளரால் மருதங்கேணி பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த மருதங்கேணி பொலிஸார் சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

தொடர்ந்து பரீட்சை நிலைய மேற்பார்வையாளரால், எழுத்து மூலமாக பரீட்சை நிறைவுபெறும் வரையான காலம்வரை பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறுகோரி முறைப்பாடொன்று மருதங்கேணி பொலிஸாரிடம் வழங்கப்பட்டது. அதற்கமைய பரீட்சைகள் நிறைவடையும் வரையில் பொலிஸ் பாதுகாப்பை வழங்கவும், நடமாடும் பொலிஸ் கண்காணிப்பை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-100)

## சிவமோகனின்...

மன்றம் இன்று தனது முடிவை அறிவிக்கவுள்ளது.

வழக்காளி தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி கு.குருபரனும், வழக்கின் முதல் மூன்று எதிராளிகளான கட்சியின் பதில் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், கட்சியின் முன்னாள் பதில் பொதுச்செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், கட்சியின் நிர்வாகச் செயலாளர் எக்ஸ்.குலநாயகம் ஆகியோர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி கே.சயந்தன் ஆகியோரும், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் சார்பில் சட்டத்தரணி கோவர்த்தனும் இறுதியாக முன்னிலையாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## 29வீத...

மாணவர்கள் சுகாதார ஆய்வறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இடைவிலகும் மாணவர்களில் மிகவும் அதிகளவானவர்கள் ஆண் மாணவர்கள் என்றும், போதைப்பொருள் பழக்கம், வறுமை, திருமணம் மற்றும் குடும்பச்சூழ்நிலை என்பன காரணமாகவே அதிகளவான மாணவர்கள் தங்களின் கல்வியை இடைநிறுத்தியுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## தென்னக்கோன்...

அதிபர் தேசபந்து தென்னக்கோன் மாத்தறை நீதிமன்றத்தில் நேற்றுக் காலை சரணடைந்துள்ளார். நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய அவர் இன்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் திகதி மாத்தறை வெலிகம பெலேன பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு தொடர்பில், பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உட்பட கொழும்பு குற்ற விசாரணைப்பிரிவின் எட்டு முன்னாள் அதிகாரிகளைக் கைது செய்ய மாத்தறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

தேசபந்து தென்னக்கோன் தொடர்ந்து தலைமறைவாக இருந்த நிலையில், அவரைக் கைதுசெய்வதற்காக திறந்த பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதையடுத்தே, அவர் நேற்றுக் காலை நீதிமன்றத்தில் சரணடைந்தார். தொடர்ந்து அவரை இன்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-44)

## யாழ்..

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி மன்றங்களுக்குமாக 175 தரப்புகள் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.சசீவன் உதயனுக்குத் தெரிவித்தார்.

11 கட்சிகளையும் 27 சுயேச்சைக் குழுக்களையும் சேர்ந்த தரப்புகளே இவ்வாறு கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன. (அ-ம-26-125)

## மன்னாரில்....

மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்காக 55 தரப்புகள் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன என்று மன்னார் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் கனகேஸ்வரன் தெரிவித்தார்.

15 கட்சிகள் மற்றும் 5 சுயேச்சைக் குழுக்களையும் சேர்ந்த தரப்புகளே இவ்வாறு கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன.

இதேவேளை நேற்று மாலை 4 மணி வரை 20 வேட்புமனுக்கள் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களால் வெவ்வேறு சபைகளுக்காகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (அ-ம-56-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 9 மாதங்களின் பின்னர்

# பூமிக்காற்றை சுவாசித்தார் சுனிதா

வொஷிங்டன், மார்ச் 20

சர்வதேச விண்வெளி நிலையத்தில் கடந்த 9 மாதங்களாக (286 நாள்கள்) சிக்கித்தவித்த சுனிதா வில்லியம்ஸ், அமெரிக்க விண்வெளிவீரர் நிக் ஹேக், ரஷ்ய விண்வெளிவீரர் அலெக்சாண்டர் கோர்புனோவ் உள்ளிட்ட நால்வரும் நேற்று அதிகாலை இந்திய நேரப்படி 3 மணியளவில் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலம் மூலம் பூமிக்குத் திரும்பியுள்ளனர். இதனை உலகளாவியரீதியில் மக்கள் கொண்டாடிவருகின்றனர்.



**சுனிதா வில்லியம்ஸ்**

உலகளவில் பேசப்படும் விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் இந்தியா வம்சாவளியைச் சேர்ந்தவர்.

சுனிதாவின் தந்தையான அமெரிக்க விஞ்ஞானி தீபக் பாண்டியா, குஜராத்தை பூர்வீகமாகக் கொண்டவர்.

போயிங் நிறுவனத்தின் ஸ்டார் லைனர் விண்கலம் மூலம் 8 நாள் பயணமாக கடந்த ஜூலை மாதம் சர்வதேச விண்வெளி மையத்துக்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பூட்ச் வில்மோர் ஆகியோர் சென்றனர்.

ஆனால் ஸ்டார் லைனரில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அவர்கள் பூமி திரும்பத் தாமதம் ஏற்பட்டது. அடுத்தடுத்த முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில் அவர்கள் சென்ற ஸ்டார் லைனர் மட்டும் வீரர்கள் இன்றி பூமி திரும்பியது.

**மீட்பர் டிராகன்**

இந்த நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன் அவர்களை மீட்பதற்காக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலம் விண்வெளிக்கு அனுப்பப்பட்டது.

அங்கிருந்து டிராகன் விண்கலம் பூமியின் வளிமண்டலத்துக்குள் நுழைந்தபோது சற்று நேரத்துக்கு கட்டுப்பாட்டு அறையுடனான தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது. இது வழக்கமான நடைமுறையாகும். அப்போது விண்கலத்தைச் சுற்றி 1927 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை இருந்தது. டிராகன் விண்கலத்தின் வெப்பத்தடுப்பு ஓடுகள் உள்ளே இருந்த விண்வெளி வீரர்களைப் பாதுகாத்தன.

சிறிது நேரத்துக்குப் பிறகு தகவல் தொடர்பு மீட்கப்பட்டு கடலில் இறங்குவதற்கான பணிகள் தொடங்கப்பட்டன. தன்னிச்சையாக விண்கலம் பூமியை நோக்கி விரைந்தது.

அப்போது விண்கலம் சுமார் 27,000 கிலோமீட்டர் வேகத்தில் வந்து கொண்டிருந்தது. பின்னர் விண்கலத்தின் வேகத்தைக் குறைக்கும் பாரசூட்கள் விரிந்தன. நாசாவின் கமராக்களில் இந்த நிகழ்வுகள் தெளிவாகப் படம்பிடிக்கப்பட்டன. பின்னர் படிப்படியாக வேகம் குறைக்கப்பட்டு கடலில் வந்து விழுந்த விண்கலத்தை, நாசாவின் மீட்புப் படகுகள் பத்திரமாக கப்பலுக்கு எடுத்து வந்தன. சுமார் 17 மணி நேரப் பயணத்திற்குப் பின்பு அவர்கள் பாதுகாப்பாக பூமியை அடைந்துள்ளனர்.

**சாகசம்**

விண்வெளியில் நீண்ட காலம் தங்கிய முதல் பெண்மணி, சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு வெளியே அதிக மணிநேரம் செலவழித்த பெண் ஆகிய சாதனைகளை சுனிதா வில்லியம்ஸ் படைத்துள்ளார். இது சுனிதா வில்லியம்ஸின் மூன்றாவது விண்வெளிப் பயணம். மூன்று பயணத்திலும் சேர்த்து மொத்தமாக ஒன்பது முறை விண்வெளியில் நடந்துள்ளார் சுனிதா. இந்தக் காலகட்டத்தில் மொத்தம் 62 மணி நேரம் 6 நிமிடங்களை அவர் விண்வெளி நடையில் செலவிட்டுள்ளார்.

# உயர்நீதிமன்ற வழக்காலேயே பட்டதாரிகள் நியமனம் தாமதம்

## ஹரிணி அமரசூரிய விளக்கம்

உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கால் பட்டாரிகளுக்கு நியமனம் வழங்குவது தடைப்பட்டுள்ளது.

அடுத்த வழக்குத் தவணையில் வெற்றிடங்களை நிரப்ப அனுமதி கிடைத்தால் அது தொடர்பில் உடனடியாகச் செயற்படுவோம் என்று பிரதமரும், கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வேலையற்ற பட்டதாரிகளுக்கு எமது தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டமைக்கு அமைய தொழிலில் இணைக்கும் நடவடிக்கையை மேற்கொள்கின்றோம். அதற்கென ஒழுங்கு விதிகள் உள்ளன.

கடந்த அரசாங்கங்கள் போன்று எந்த வித முறைமையும் இல்லாமல் உயர்ந்தவரா குட்டையானவரா என பார்த்து நாங்கள் தொழில் வழங்குவதில்லை.

தொழில் வெற்றிடம் காணப்படும் துறைகளுக்கு ஆள்களை இணைத்துக்கொள்வதற்கு போட்டிப்பரீட்சை, நேர்முகப்பரீட்சை நடத்தியே இணைத்துக்கொள்கிறோம். பட்டதாரிகளை ஆசிரியர் தொழிலுக்கு இணைத்துக்கொள்ளத் தடையாக இருப்பது, உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுவரும் வழக்காகும். இது எதிர்க்கட்சியினருக்கும் தெரியும்.

பெரியளவில் ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன. ஆனால் வழக்கு விசாரணையின் தீர்ப்பின் அடிப்படையிலே எம்மால் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ள முடியும். இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவையில் எடுத்த தீர்மானத்தை நாங்கள் சட்டமா அதிபர் ஊடாக நீதிமன்றத்துக்கு அறிவித்திருக்கிறோம். அடுத்த வழக்கு விசாரணை ஏப்ரல் ஆரம்பத்தில் இடம்பெறவிருக்கிறது. இதன்போது எமது நிலைப்பாட்டை நீதிமன்றத்துக்குத் தெரிவிப்போம். எங்களுக்கு அனுமதி கிடைத்தால் உடனடியாக அதுதொடர்பில் செயற்படுவோம். அதையும் நாங்கள் சரியான முறைமையின் பிரகாரமே மேற்கொள்வோம்-என்றார். (எ-இ)

**காணிகள் விற்பனைக்கு**
கொக்குவிலில் 1.2 பரப்பு, 2.25 பரப்பு காணிகள் விற்பனைக்கு உண்டு.
077 771 0785, 077 979 8053

**வேலை ஆட்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு வேலை ஆட்கள் தேவை.
- sales Executive
- Motor Cycle Salesman
- computer skilledd workers

கல்வித்தகைமை - O/L & A/L
முன் அனுபவம் வரவேற்கத்தக்கது
திறமை மற்றும் அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்
உங்கள் சுயவிபரக் கோர்வையை (CV/Biodata) கீழ்வரும் இலக்கத்திற்கு whats up செய்யலாம்
தொடர்பு:- 077 723 8373

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org